


அமரர்

இளைப்பாறிய ஆசிரியர்

# கணபதிப்பிள்ளை துரைரத்தினம்

அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

03.10.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தாயின் மடியில்
- 01 - 10 - 1935

இறைவன் அடியில்
- 03 - 09 - 2012

அமரர்

# கணபதிப்பிள்ளை துரைரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

## திதி வெண்பா

சிந்தை மகிழச் சீர்மிகு கல்விதனை சிறப்புடனே கற்பித்த
சிந்தனைச் செம்மல் சீரிய நல் ஆசான் துரைரத்தினம்
நந்தன வருட ஆவணித்திங்கள் அபரபக்க திருதியைதனில்
பந்தங்களை விடுத்துப் பரமன்தாள் சென்றடைந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்களை குணசீலர்களாய்
பார்போற்ற வாழ வைக்க
மெழுகுதிரியாய் ஒளிர்ந்த
எம் குடும்பத் தலைவரின்
நினைவுகளோடு இந்த
நினைவு மலரை அவர்
தம் பொற்பாதங்களில்
அஞ்சலிப் பூச் சொரிந்து
காணிக்கையாக்குகின்றோம்.

-நினைவுடன்-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப்பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

திருஞான சம்பந்தர் தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்டகண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற் சோதிமிக்க
உருவேயென்னுறவே யென்னூனேயூனின்
உள்ளமே யுள்ளத்தினுள்ளே நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவேயென்கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடுபாவாய் காவாய்
அருவாய வல்வினை நோயடையாவண்ணம்
ஆவடுதண்டுறையுறையும் அமரரேறே.

சுந்தரர் தேவாரம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னேயுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

மாணிக்கவாசகர் திருவாசகம்

கடையவனே யென்னைக் கருணையினாற்
கல்ந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னுமுத்தர
கோச மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன்
எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே.

திருவிசைப்பா

நீறணிபவளக்குன்றமே நின்ற
நெற்றிக்கண்ணுடையதோர் நெருப்பே
வேறணிபுவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா
ஐம்பொன் செய்யம்பலத்தரசே
ஏறணிகொடியெம் ஈசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே.

திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாளுமை கோனடி
யோமுக்கருள் புரிந்து
பின்னைப்பிறவியறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

திருமந்திரம்

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற்பூசி மகிழ் வீரேயாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வீரே.

பதினோராந்திருமுறை

சிந்தனை செய்ய மனமமைத்தேன்
செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத்தலையமைத்தேன்
கை தொழவமைத்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தனை செய்வதற் கன்பமைத்தேன்
மெய்யரும் பாவைத்தேன்
வெந்த வெண்ணீறணி யீசற்கு
இவையான் விதித்தனவே.

### திருப்புராணம்

வேதநாயகனேபோற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொருபாகா போற்றி மறு சமயங்கள்மாளப்
பேதகஞ்செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றியான்செய்
பாபமனைத்துந்தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

### திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசை மேவிய பெருமானே.

## *வைரவர் துதி*

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே யொழித்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

### நமச்சிவாய மாலை

அறைமறை அயனுமாலும் அமரருமுனிருவர் தாமும்
முறைமுறை வணங்கியேத்தும் முதல்வனே நமச்சிவாய
ஆதியாய் வேதநான்காய் அடிமுடி தெரியாவண்ணம்
சோதியாய் நிறைவாய் நின்ற துணைவனே நமச்சிவாய
இணையடிதேடிக்காணா ஏழுலகளந்த மாயன்
கணையாத வெயின் மூன்றெய்த கடவுளே நமச்சிவாய
ஈட்டிய பொருள் போலுன்றன் இணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம் பொன்மேனி வள்ளலே நமச்சிவாய
உமையொரு பாகம் வைத்த உம்பர்கள் தம்பிரானே
அமைதரு மணியே முத்தே அண்ணலே நமச்சிவாய
ஊனுமாயுயிருமாகி உள்ளுமாய்ப் புறமுமாகித்
தானுவாய்ச் சகத்துக் கெல்லாம் தந்தையே நமச்சிவாய
எழுபிறப்பதனால் மாழ்கும் என்னுயிர்க்கிரங்கிவந்து
பழுதற ஆண்டு கொள்ளும் பரமனே நமச்சிவாய
ஏடவிழ்கோதை மாதர் இளமுலை மயக்கப்பட்டு
நீடுதலொழிக்க வல்ல நிமலனே நமச்சிவாய
ஐய மேற்றுண்டாய் பாதம் அன்பிலேன் தலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றுந்தவனே நமச்சிவாய
ஒன்பது வாயிற்கூட்டில் ஒடுங்குயிர் உய்யும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சிவாய
ஓமெனு மெழுத்தினுள்ளே ஒளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சிவாய
ஔவியம் பேசா வண்ணம் அடிமையைத் தடுத்தாட்கொள்ளும்
திவ்விய மணியே முத்தே தேனே நமச்சிவாய
அஃகினைப் பூண்டு கொண்டே அரிய வெண்ணீறு பூசுஞ்
சொர்க்கனே செக்கர் மேனித்தூயனே நமச்சிவாய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*Love is God*

**ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்**

**Sri Nagulambika sametha Sri Naguleswara swamy Temple**

Sivasri K. Naguleswara Kurukkal *J.P. (All Island)*
Governing Authority & Chief Priest
Naguleswaram, Keerimalai
Kankesanthurai, Sri Lanka.
T.P No: 060221 2440

சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் (ச.நீ)
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை,
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா
தொ. இல: 060221 2440

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்ற வாக்கியத்தின்படி இவ்வுலகில் மானிடப் பிறப்பு எடுத்து அமரத்துவம் அடைந்த கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்கள் வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி கிளானையம்பதியை வதிவிடமாகவும் வாழ்ந்து தற்போது புத்தூரில் பல செல்வங்களோடு வாழ்ந்து 03.09.2012 அன்று ஈசனடி எய்தி விட்டார். அவர் வாழ்ந்த காலத்தில் நகுலேஸ்வரப் பெருமானின் சிவ சிந்தனையோடு வாழ்ந்து பல தொண்டாற்றியதை யாராலும் மறக்க முடியாது.

மற்றும் பல ஆலயங்களுக்கும் தொண்டு செய்து பேரானந்த வாழ்கை வாழ்ந்து இவ்வையகத்தை விட்டு வானுலகில் கைலாயநாதன் திருவடியைச் சரணடைந்தார். அன்னாரின் மறைவால் துயருடன் வாழ்கின்ற அனைவருக்கும் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம்

ராஜராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள்

நகுலேஸ்வரர் ஆதீனம்,

கீரிமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
## MAVIDDAPURAM SRI KANTHASWAMY TEMPLE

மஹாராஜஸ்ரீ
து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீன கர்த்தா - பிரதமகுரு.
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை,
ஸ்ரீலங்கா

T.P. 021 3210349

Maharajasri
D.S.Ratnasabapathy Kurukkal
*Governing Authority & Chief High priest*
*Mavai Aadheenam.*
*Maviddapuram,*
*Tellippalai*
*Sri Lanka.*

வசாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டு மக்களின் நன்மதிப்புக்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் உயர்ந்த நிலையில் வாழ்ந்து ஆலயங்கள் தோறும் பல நிகழ்வுகளில் கலந்து இறையருள் பெற்று சிறப்பிக்கப்பட்டு மாவைக்கந்தனின் பாதாரவிந்தங்களில் தன்னை அர்ப்பணித்து அமரத்துவமடைந்த கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களது இழப்பு உலகிற்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

து.ஷ இரத்தினசாமிக் குருக்கள்
ஆதீனகர்த்தா,பிரதமகுரு
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை,
ஸ்ரீலங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## ஸ்ரீமத் சிவசிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோயில்

ஈசான சிவாச்சாரியார்,
ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக்குருக்கள்,
அறங்காவலரும், பிரதம சிவாச்சாரியாரும்,
புனருத்தாரணக்குழுத் தலைவரும்

சிதம்பரேஸ்வரம்,
மாவை கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை,
இலங்கை

# அமரர் க.துரைரத்தினம் ஆசிரியர் சிவபதமடைந்தது பேரிழப்பாகும்

அமரர் அவர்கள் வசாவிளான் பதியிலிருந்து கொல்லங்கலட்டியில் தர்மத்தில் புகழ் பெற்ற சங்கரப்பிள்ளை தம்பதிகளின் மகள் மனோன்மணியை விவாகம் செய்து இல்லறம் நடாத்தும் ஞான்று நான்கு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பெற்று கல்வி புகட்டி உரியவகையில் விவாகம் செய்து பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து மகிழ்ந்த வேளையில் வெளிநாட்டிலிருந்து மகன் மாரும் மருமக்களும் பேரப் பிள்ளைகளும் தொலைபேசியில் உரையாடுவதில் மகிழ்ந்து தனது கடைசி மகன் இளமுருகனுடன் புத்தூரில் வாழ்ந்து வரும் போது 03.09.2012 அன்று சிவபதமடைந்து விட்டார் அன்னார் தனது கடமையை சரி வரச் செய்ததுடன் ஆசிரிய தொழிலில் லீவு எடுக்காமல் பாடசாலை சென்று கல்விபுகட்டுவதில் தான் மகிழ்ச்சியடைந்து ஓய்வு பெற்று வாழ்ந்தார்

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய மாவைகொல்லங்கலட்டி ஸ்ரீசிவகாமவல்லியுடன் ஸ்ரீமத் சிவசிதம்பரரேஸ்வரப் பெருமானை பிரார்த்திப்பதுடன் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள் மற்றும் உற்றார் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன்.

ஈசானசிவாச்சாரியார்,

ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



**மாவை கிளானை அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானம்**

**MAVAI KILANAI, GNANA VAIRAVAR THEVASTHANAM**

கிளானை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. Kilanai, Kollankaladdy, Tellippalai.

---

சான்றாண்மை மிகு துரைரட்ணம் ஆசான்

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்"

பிறரிடத்தில் காணும் சிறப்புக்களை மிகைப்படுத்தி பேசுவோர் பெருமை உடையோராவர். இவர்கள் குற்றத்தை கடுகளவும் நினையார். கடமை என்னும் சொல்லின் உதாரணபுருஷர்கள் சான்றோர்களே. உலகில் உள்ள நல்ல செயல்கள் எல்லாம் அவர்கள் ஆற்றிய கடமைகளே. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல், பழிவாங்குபவர்க்கு அஞ்சும் பண்பு, பொதுநலம், இரக்கம், உண்மை உரைத்தல் ஆகிய ஐந்தும் சான்றோரின் பெரும் தூண்களாகும். இத்தகு சான்றாண்மைப் பண்புக்குரியவர் திரு.கணபதிப்பிள்ளை துரைரட்ணம் ஆசானே யாகும். இவர் அமரராகி விட்டார் என்பதறிந்து மிக வேதனை அடைந்தேன் பிறப்பு எல்லா உயிர்களுக்கும் ஒன்றே ஆனால் சிறப்பு அவர் அவர் செய்யும் செயல்களின் வெளிப்பாடே என எண்ணி விதியா? நிலையாமையா என நினைத்து அமைதி அடைவோமாக ஆக அன்னாரின் சேவையில் உயர்ந்த பாடசாலையும் கிளானை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயமும் அவர் சேவையில் அமரர் பெயர் சொல்லி நிற்கும். அன்னாரின் ஆத்மாசாந்திக்காய் நாமும் ஸ்ரீ ஞான வைரவப் பெருமானை இறைஞ்சுவோமாக.

கிளானை ஸ்ரீ ஞான வைரவராலய பிரதமகுரு
சிவஸ்ரீ.செல்வரத்தின செல்லகுமார் ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை கிளானை வளர்மதி சனசமூகநிலையம்
## MAVAI KILANAI, VALARMATHI COMMUNITY CENTRE.

கிளானை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. Kilanai, Kollankaladdy, Tellippalai.

பதிவு இலக்கம் REG. NO } J-VC-C48

15/09/2012

## பொதுப்பணியின் சிகரமே!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவரே அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் ஆசிரியர் அவர்கள் தனது இளமைக்காலம் முதல் எமது கிளானை வளர்மதி சனசமூகத்தின் வளர்ச்சிக்காக உழைத்த பெருமகனாவார். அமரர் துரைரத்தினம் ஆசிரியர்கள் அவர்கள் வளர்மதி சனசமூகத்தின் முன்னாள் கணக்காய்வாளரும், விளையாட்டுப்போட்டி, வீதிதிருத்தம் போன்ற பணிகளை முன்னின்று செயற்படுத்திய சமூகசேவையாளனும், கிளானை ஞானவைரவர் ஆலய திருப்பணிகளை தன்னால் இயலுமானவரை நெறிப்படுத்திய சமயவல்லுனரும் ஆவார்.

ஒருவர் எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்ந்தார் என்பது முக்கியமல்ல அவர் எவ்வகையான செயற்பாடுகளை சமூக நன்மைக்காக செய்தார் என்பதுதான் முக்கியம் இந்தவகையில் அமரர் நிறைவான பணிகளை சமூகத்திற்காக ஆற்றியுள்ளார்.

அன்னாரது இழப்பு எமது கிளானை கிராமத்திற்கும், வளர்மதி சனசமூகநிலையத்திற்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கிளானையம்பதி ஞானவைரவர் பாதக்கமலங்களை இறைஞ்சி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| திரு. அ. வெற்றிவேலாயுதம் | திரு. இ. கவிதன் | திரு. கு. சந்திரகுமார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ





## அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்கள் ஆலய வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பணிகள்

எங்களது கிளானை கிராமத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள் மிகு கிளானை ஞானவைரவப் பெருமான் ஆலயம் நீண்டகால யுத்த இடப் பெயர்வுகளுக்குப் பின்னர் இன்று புதுப்பொலிவு பெறுகின்றது. பொருள், பண்டம், சொத்துக்கள் சகலதையும் இழந்த நிலையில் இன்று ஊர்மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். வீடு வாசல்களை விட, தங்களது குல தெய்வத்தின் சந்நிதியைப் புதுப்பிப்பதில், பெருப்பிப்பதில், பொலிவு பெற செய்வதில் குடிமக்கள் கொண்டுள்ள ஈடுபாடு அவர்கள் குல தெய்வத்தின் மீது கொண்டுள்ள இறை நம்பிக்கை எவ்வளவு பெரியது என்பதையே வெளிப்படுத்துகின்றது.

ஞான வைரவப் பெருமானின் ஆலய வளர்ச்சிக்கு ஊர்மக்களது இறை நம்பிக்கை மட்டுமல்ல முன்னையவர்கள் ஆற்றிய அரும்பணிகள் எல்லாம் அத்திவாரமாக அமைகின்றது. ஆலயத்தின் வளர்ச்சிக்காக தொண்டுகள் செய்த பலரது விடாமுயற்சிகளும், அரும்பணிகளும் பெரிதும் நினைவு கூரப்பட வேண்டிவை. குடி மக்கள் எல்லோரதும் உயர்மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய, 50வருடங்களுக்கு மேலாக ஆலயத்தை முறைப்படி பரிபாலனம் செய்த மறைந்த தம்பிரான் ஐயா இட்டுவைத்த அத்திவாரத்திலிருந்து தான் எம்பெருமான் ஆலயம் நிமிர்ந்து வளர்கின்றது. தம்பிரான் ஐயா முதுமையடைந்து தளர்வுற்ற வேளையில் ஞான வைரவப் பெருமானது ஆலய பரிபாலனத்தை குடிமக்கள் மயப்படுத்தி செம்மையான ஒரு பரிபாலனசபை அமைவதற்கு அருந் தொண்டாற்றியவர்கள் பலர், ஆலய பரிபாலன சபையை நீண்ட காலம் நல்வழிப்படுத்திய ஓய்வு பெற்ற அதிபர் மூ.நடராசா, சபாபதி குணரத்தினம், செல்வரத்திம் ஐயா, மறைந்த ஆசிரியர் மார்க்கண்டு இவர்கள் எல்லோரதும் அயராத முயற்சிகளும் சேவைகளும் என்றென்றும் நினைவு கொள்ளப்பட வேண்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாளில் ஓய்வு பெற்ற ஆசிரியர் அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களை நினைவு கூரும் வேளையில், அமரர் துரைரத்தினம் ஆசிரியர் அவர்கள் எங்களது கிராமத்தின் சமய சமூகப்பணிகளில் கொண்டிருந்த உளப்பூர்வமான அக்கறையும் அவர் ஆற்றிய சேவைகளும், எம்மனதைவிட்டு என்றும் அகலாத வகையில், எங்கள் மனங்களில் பதியப்பட வேண்டியவை.

❁ ஞான வைரவப் பெருமான் ஆலயத்தின் சுற்றயலில் வாழ்கின்ற குடிமக்கள் எல்லோரையும் ஒரு குடியும் தவறாமல் ஆலய நித்திய நைமித்திய பூசைகளில் பங்கு கொள்ள வைத்தமை உபயகாரர்களாக, உரிமைக்காரர்களாக ஆக்கியமை.

❁ நாள்தவறாமல், வருடத்தின் 365 நாட்களும் நித்திய நைமித்திய பூசைகள், விசேடகால அபிசேகங்கள், ஆராதனைகள் எதுவுமே தடையின்றி நடைபெறவும் நிலைபெறவும் வைத்தமை.

❁ நாளாந்த ஆலயபரிபாலனம், பூசகருக்குரிய வேதனம் மேலும் செலவீனங்கள் சகலதையும் நிவர்த்திக்கும் வகையில் நிலையான வருவாய்க்குரிய வழிகளை ஏற்படுத்தி மிகவும் வெளிப்படையான, நிதி நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தியமை.

❁"சிறு துளிதான் பெரு வெள்ளமாகிறது" பொருள் மிகுந்த இந்த கருத்துக்கு செயல் வடிவம் ஏற்படுத்தியவர். கிராமத்து மக்களது உழைப்பிலும், முயற்சியிலுமே கோயிலின் நிலைபேறான வளர்ச்சி தங்கியுள்ளது என்பதனை மெய்ப்பித்தவர்.

அருள்மிகு கிளானை ஞானவைரவப் பெருமானது ஆலயம் மேலும், மேலும் வளர்ச்சியடைவதற்கான, நல்வழிகளை வகுத்துத்தந்த பெருமகனை, நாமெல்லோரும் பெருமனதுடன் நினைவுகூருவோமாக

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!

கிளானை ஞான வைரவர் ஆலய
பரிபாலன சபையினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையே பெரியது என வாழ்ந்தவர்

காலஞ் சென்ற க.துரைரத்தினம் ஆசிரியர் கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலையில் சுமார் எட்டு ஆண்டுகளாக ஆசிரியராகவும் உப அதிபராகவும் சிறப்பாகக் கடமை ஆற்றியவர் கடமையில் கண்ணியம் உள்ளவர். "செய்யுந் தொழிலே தெய்வம்" என வாழ்ந்தவர். தான் எடுத்த பொறுப்புக்களைச் சிறப்பாகச் செய்து பாடசாலை நிர்வாகத்திற்குப் பெரும் பணியாற்றியவர். மாணவர்களின் இலவச உணவு கொடுக்கும் பொறுப்பை ஏற்று எவரும் குறைகாணாத முறையில் ஒழுங்காக கணக்குகள் வைத்து, மாணவர் மகிழ்ச்சியடையக் கூடியதாக மதிய உணவை ஆசிரியர்களின் உதவியுடன் வழங்கினார்.

இந்த உலகிலே சிலர் இலைமறை காய்போல வாழ்கின்றனர். இவர்களுள் துரைரத்தினம் ஆசிரியரும் ஒருவராவார் ஆங்கிலம், தமிழ், கணிதம் முதலான சகலபாடங்களும் கற்பிக்கும் ஆற்றல் இவரிடம் உண்டு. இவரின் திறமைகள் பெரும்பாலும் சிறிய பாடசாலைகளுக்கே கிடைத்துள்ளன. ஆசிரியரின் குணாதிசயங்களைச் சிறிது நோக்குவோம். தொந்தரவைத் தூக்கித் தோளிற்போடாமல் தந்திரமாகவாழப் பழகியவர் அழுக்காறு (பொறாமை) அவா (ஆசை) வெகுளி (கோபம்) இவைக்கு இடம் கொடுத்தால் தனக்குத் தீமை ஏற்படும் என்பதை உணர்ந்தவர் அவற்றை அகற்றுவதில் வெற்றி கண்டுள்ளார். இன்சொற்பேசுவார், பொறுமை கடைப்பிடித்தார். எனவே மாசில்லா மனத்தைப் பெற்றுக் கொண்டார். அன்பினால் ஆக்கம் உண்டு என்பதை உணர்ந்த ஆசிரியர் மாணவர்களோடும், ஆசிரியர்களோடும் உற்றார் உறவினரோடும் அயலவர்களோடும் அன்பாக வாழ்ந்த பெருமை இவருக்கு உண்டு.

ஆசிரியருக்கு வாய்த்த இல்லாள் மனைத்தக்க மாண்புடையவர். வளத்தக்காள் கணவன் தன்கடமையைச் செய்ய மனப்பூர்வமான உதவிகள் செய்தவர். இவரது மக்கள் நல்லவர்கள், வல்லவர்கள் நல்லகுடும்பம் என்று சொல்லக் கூடியதாக வாழ்கிறார்கள். கடைசிகாலத்தில் உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பதற்கிணங்க ஆசிரியர் நோய்காரணமாக வருத்தப்பட்டார். பேசி, கதைத்து வானொலி கேட்டபடியே வாழ்ந்து எம்மைவிட்டகன்றார். இவர்களின் ஆத்மா நற்கதி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக

வே.தனபாலசிங்கம் (முன்னாள் அதிபர்)

யா/கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்பண்புகளின் உறைவிடமான என் மாஸ்ரர்

அல்லும் பகலும் ஆண்டவனை அடிதொழுது
அறங்கிடந்த நெஞ்சும் அருள் ஒழுகு கண்ணுமாய்
ஆலமர விருட்சமதாய் அயல் தனில் அமர்ந்து
உதவிக்கும் உறவுக்கும் உறுப்பினனாய்
அன்பு வழி காட்டி அற நெறிகள் பல கூறினீரே!

பாரினிலே பல கண்டும் பணிவுடனே தான் நடந்து
பதவியிலும் பண்பு கொண்டு பார் புகழ் பணியாற்றியவரே!
மாவை கிளானை வைரவர் பதியிலும்,
வளர்மதி, சனசமூகநிலையத்திலும்
கணக்காய்வாளராகப் பணிசெய்ய
நானோ பொருளாளராய் இருந்தேன்
எனது கடமைகளை உணர்த்தி சரி வரச் செய்ய
ஊன்று கோலாய் இருந்த உத்தமரே
தக்க பயனும் சொல்லி வழி நடத்திட்ட மாஸ்ரரே

சிந்தனையில் உதித்திடும் எண்ணங்களைச்
சிலேடையாக எடுத்து நல்வழி காட்டியவரே
ஏணியாக நின்று என்னை வழிகாட்டியவரே
சரியான பாதையில் என்னை வழிகாட்டியவரே
மாஸ்ரர் என கூறும் போது இன்றும்
என் அடி மனம் குமுறுகின்றது
உள்ளத்தில் கள்ளமின்றி
ஊரொடு கூடி கனிவாகப் பேசிக் கருணையுடன்
கவலைகள் போக்கி வாழ்ந்திருந்து
கனவுகளை மெய்ப்பித்து கை தவறிப் போனதென்ன

“வாழ்வது மாயம்” “மண்ணாவது திண்ணம்”
என்ற நிலையற்ற நித்தில வாழ்வை நினைத்து
உங்கள் உடல் உம் உயிரை சுமக்க மறுத்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை விட்டகன்றீர்
என்னுடல் என் உயிரை சுமக்க மறுக்கும் நாள் வரை
நாம் என்றும் உமை மறவோம்
உங்கள் ஆன்மா ஈடேற்றத்திற்காய்
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.......
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நண்பன் வ. முருகையா [தங்கவேல்]

## கற்றலுக்கு வலுவூட்டிய கற்றறிந்தோன்

அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் ஆசிரியராகவும் உப அதிபராகவும் பணி செய்த கற்றறிந்தவர் ஆவார். இவர் வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட போதும் மூளாயைத் தனது வசிப்பிடங்களில் ஒன்றாகக் கொண்ட காரணத்தினாலும் தனது பேரப்பிள்ளைகள் கல்வி கற்ற பாடசாலையின் வளர்ச்சிக்குத் தனது பங்கை ஆற்றியவர். யா/மூளாய் சைவப்பிரகாசவித்தியால யத்தில் கற்கும் தரம் 5 மாணவர்களின் போசணை பற்றி அக்கறை கொண்டு மேலதிக வகுப்புக்களின் போது சத்துணவு வழங்கியவர். இவ் வித்தியாலயத்தின் அனைத்து விழாக்களுக்கும் நிதியுதவி செய்த பெருமகனாவார். இவ் வித்தியாலயத்தில் கல்வி கற்ற தர்ஷிகா, ஸ்ரீலவன், தரணிகா, மோகன்ராம், மோகனாங்கி ஆகியோரின் கல்விக்கான ஊக்குவிப்பாளராக விளங்கினார். அன்னாரின் வழிகாட்டலில் அன்னாரின் மகளான திருமதி நந்தினி பத்மநாதன் அவர்களும் இவ்வித்தியாலய வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவராக விளங்கியமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. பல சமூக நிறுவனங்களின் பொருளாளராகக் கடமைகள் பலவற்றை சமூகத்திற்கு வழங்கிய சமூக சேவையாளராகிய அன்னாரின் சேவைகள் மறக்க கூடியதல்ல. நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

திருமதி.சு.சிவமலர்,அதிபர்,
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழவளநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரில் மயிலிட்டி எனும் ஊரில் கனகராய முதலி மரபு வழிவந்தவர்கள் வசாவிளான் தென்மூலை என்று அழைக்கப்படும் குறிச்சியில் வாழ்ந்து வந்துள்ளார்கள். இவர்களில் மயிலிட்டி செம்மல் செங்கமலநாதர் என்பவரின் வழிவந்த ஆறுமுகம் என்பவர் தென்மூலை வாசி சின்னக்குட்டியை மணந்து கணபதிப்பிள்ளை, தம்பு, தங்கப்பிள்ளை, வயிரவப்பிள்ளை ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றனர்.

இவர்களில் செல்லர் எனச் செல்லமாக அழைக்கப்பெற்ற கணபதிப்பிள்ளை அவர்கள் வசாவிளான் தென்மூலை வாசியான சின்னக்குட்டி விதானையாரின் சகோதரராகிய சுப்பையா இளையபிள்ளை தம்பதியினரின் மூத்த மகளாகிய செல்லம் என்பவரை விவாகம்செய்து நவரத்தினம், சதாசிவம், மார்க்கண்டு, சபாரத்தினம், நாகரத்தினம், நவமணி, நடராசா, துரைரத்தினம் ஆகிய பிள்ளைகளையும், செல்லத்தின் சகோதரி சேதுப்பிள்ளை என்பவரை விவாகம் செய்து மனோன்மணி, பாலசிங்கம் எனும் பிள்ளைகளையும் பெறும் பேறு பெற்றனர், பயிர்ச் செய்கையுடன் புகையிலை வியாபாரத்தையும் மேற்கொண்ட கணபதிப்பிள்ளை அவர்கள் நடப்பு நாட்டாண்மையுடன் வாழ்ந்த செம்மல் ஆவார்.

கணபதிப்பிள்ளை செல்லம் தம்பதியினரின் மூத்த புத்திரனாகிய அதிபர் நவரத்தினம் கருகம்பனைப் பதியின் அம்பலவாணர் சின்னத்தங்கச்சியின் மகளாகிய பொன்னுப்பிள்ளையை மணந்து கீதாஞ்சலி, மகேந்திரராணி, பக்தவத்சலன் ஆகிய பிள்ளைகளை பெற்றனர்.

இரண்டாவது மகனாகிய சதாசிவம் கருகம்பனை சுப்பரின் மகள் சிவகாமசுந்தரி என்பவரை மணந்து சந்திரபாலன், பாலச்சந்திரன், சகுந்தலாதேவி, சுசீலாதேவி, பாலகௌரி, உதயச்சந்திரன் எனும் பிள்ளைகளைப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது மகனாகிய மார்க்கண்டு கருகம்பனையைச் சேர்ந்த அம்பலவாணர் சின்னத்தங்கச்சியின் புத்திரியாகிய தங்கமுத்து என்பவரை மணந்து சரோஜினிதேவி, ஜெகதீஸ்வரி, ஜெயந்திராவதி, வாசவிதாசன் ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றனர்.

கணபதிப்பிள்ளையின் நான்காவது மகனாகிய சபாரத்தினம் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த அம்பலப்பிள்ளையின் மகளாகிய மனோன்மணி என்பவரை மணந்து மாலினி, உமாகாந்தன் என்போரை பிள்ளைகளாகப் பெற்றனர்.

மூத்த மகளாகிய நாகரத்தினம் கருகம்பனை அம்பலவாணர் மகன் சின்னத்தம்பியை மணந்து சிவநேசன், சிவபுண்ணியன், சிவதேவன், சிவமலர், சிவமதி, சிவநாதன், சிவதாசன் ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றனர்.

மகள் நவமணி தாய்வழி உறவினராகிய தென்மூலை வாசியான சுப்பையாவின் மகன் பொன்னையாவை மணந்து உதயமலர், கதிர்காமவாசன் என்பவர்களை பிள்ளைகளாகப் பெற்றனர்.

மகள் மனோன்மணி பன்னாலையைச் சேர்ந்த தம்புவின் மகன் சிவசுப்பிரமணியத்தை திருமணம்செய்து பவளராஜேஸ்வரி, முருகானந்தன், நகுலேஸ்வரி, பவானந்தன், குணானந்தன், புவனா ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றனர்.

கணபதிப்பிள்ளையின் மகன் பாலசிங்கம் பன்னாலையைச் சேர்ந்த தம்புவின் மகள் செல்வநாயகியை திருமணம் செய்து வசந்தாதேவி, பவளராணி, சுகுமாரன், மோகனசுந்தரி, புஸ்பராணி ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றனர்.

அமரர் துரைரத்தினத்தின் இளைய சகோதரராகிய நடராசா வசாவிளான் மயில்வாகனத்தின் மகள் நிர்மலாதேவியை விவாகஞ்செய்து ரதிமலர், ரவிச்சந்திரன், ரகுராமன், ரவிசங்கர், ரஞ்சிதமலர், ஜாமினி, ரமேஷ் ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றனர்.

கணபதிப்பிள்ளை செல்லம் தம்பதியினரின் இளைய புத்திரனாகிய துரைரத்தினம் 01-10-1935ல் பிறந்தார். இவர் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வியை யா/குரும்பசிட்டி மகாவித்தியாலயத்திலும் உயர்கல்வியை யா/வசாவிளான் மத்திய கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். இவரும் இவரது சகோதரர்களும் கல்வி, கேள்வி அறிவுடன் ஒழுக்கசீலர்களாகவும் திகழ்ந்தனர். அமரத்துவம் அடைந்துவிட்ட துரைரத்தினம் அவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மிகுந்த அறிவுடையவராகவும், கணிதத்தில் சிறந்த திறமையுடைய வராகவும், கலைஞானமுடையவராகவும் திகழ்ந்தார். அது மாத்திரமல்லாது ஓவியம் வரைவதிலும், பனை ஓலைகளிலான கைப்பணி வேலை செய்வதிலும் மிகவும் திறமை படைத்தவர். இவரது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அழகான முத்துக்கள் போன்று அச்செழுத்துக்களாக அமைந்திருக்கும்.

துரைரத்தினம் அவர்கள் கல்வி கற்றபின் ஆரம்பத்தில் கொழும்பில் "Ford Foot Wear Ltd" எனும் பெயர் கொண்ட தனியார் நிறுவனத்தில் சிறிது காலம் வேலை செய்தார். இக்காலத்திலேயே 22-06-1955ம் ஆண்டு யாழ்பாண மாவட்டத்தின் தெல்லிப்பளையில் அமைந்துள்ள கொல்லங்கலட்டி கிளானையில் வன்னிராயர் முதலி வழிவந்த கந்தர் கோத்திரத்தில் சாணையர் என்று அன்போடு அழைக்கப்பட்ட அமரர் சின்னத்தம்பி பூதாத்தைப்பிள்ளை தம்பதியினரின் பேத்தியாகவும் அமரர் சங்கரப்பிள்ளை செல்லமுத்துப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது புத்திரியாகவும் பிறந்த மனோன்மணி எனும் மாதர்குல மாணிக்கத்தை நல் மனைவியாக அமையும் பேறு பெற்றார்.

"மங்கலம்என்ப மனை மாட்சி மற்றதன்
நன்கலம் நன் மக்கட் பேறு"

எனும் வள்ளுவப் பெருநாவலரின் வாக்கிற்கேற்ப கதிர்காமலிங்கம், ரவீந்திரன், முருகானந்தம், நந்தினி, இளமுருகன் என நல்ல புத்திரச் செல்வங்களை பெறும் பாக்கியம் பெற்றார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பொய்யா மொழிப் புலவரின் சொல்லுக்கிணங்க பிள்ளைகள் கல்வி கேள்வி அறிவுகளில் சிறந்து விளங்கவும், ஒழுக்கமுடையவர்களாகத் திகழவும், பல்கலையும் கற்றுத் தேறவும் செய்தார், ஆரம்ப, உயர் கல்வியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும், தொழில்நுட்ப நிறுவனங் களிலும் பெற்றனர். இவரது புத்திரச் செல்வங்களுக்கு உரிய காலத்தில் சிறப்பாக திருமணம் செய்து மகிழ்ந்தார். மூத்த மகன் கதிர்காமலிங்கத்திற்கு இருபாலையை சேர்ந்த கதிரித்தம்பி மகேஸ்வரி தம்பதிகளின் திருமகள் பவானிதிசியை 1992ஆம் ஆண்டில் திருமணம் செய்து ஆரபி எனும் அரிய செல்வத்தை முதல் பேத்தியாக அடையப் பெற்றார், இவர்கள் தற்போது ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றார்கள். இரண்டாவது புத்திரர் ரவீந்திரனுக்கு பலாலியை சேர்ந்த உறவினரான கைலாயபிள்ளை காமாட்சியம்மாள் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியான மைதினியை 1993 ஆம் ஆண்டில் திருமணம் செய்து அருண், ஆரூரன் எனும் நற்பேரர்களைப் பெறும் பேறு பெற்றார். இவர்களும் தற்பொழுது ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றார்கள். மூன்றாவது புதல்வர் முருகானந்தனுக்கு தனது மைத்துனர் திருநடராஜா கோகிலாதேவி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வி ஸ்ரீகாயத்திரியை 1998ஆம் ஆண்டில் திருமணம் செய்து அபர்ணா, கரன் எனும் சீர்மிகு பேரர்களை பெற்றுக் கொண்டார் இவர்கள் தற்போது கனடாவில் வாழ்ந்து வருகின்றாகள். ஒரேயொரு பெண் பிள்ளையாக வந்துதித்த நந்தினி எனும் நங்கை நல்லாலுக்கு மூளாய் பதியை சேர்ந்த தவபாக்கியநாதன் பத்மதேவி தம்பதியினரின் தவப்புதல்வன் சங்கீத ஆசிரியர் பத்மநாதனை 1994அம் ஆண்டில் திருமணம் செய்து தர்ஷிகா, ஸ்ரீலவன், தரணிகா, மோகன்ராம், மோகனாங்கி எனும் அன்புப் பேரர்களைப் பெறும் பேறு பெற்றார். இளைய புதல்வன் சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் இளமுருகனுக்குப் புத்தூர்ப் பதியை சேர்ந்த சிற்றம்பலம் நாகேஸ்வரி தம்பதியினரின் இளைய புதல்வியும் ஆசிரியையுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளாயினி எனும் நங்கை நல்லாளை 2000 ஆம் ஆண்டில் திருமணம் செய்து நாகநர்த்தனன்,தர்ஷனா, நாககீர்த்தனன் எனும் பாசம் மிகு பேரர்களையும்பெறும் பேறு பெற்றார். இங்கே உள்ள பேரப் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டி வைத்தார்.

அமரர் துரைரத்தினத்தின் மனைவி வழிவந்த மூத்த மைத்துனர் ஆகிய வைத்திய கலாநிதி மாணிக்கம் மல்லாகத்தைச் சேர்ந்த வைத்திலிங்கத்தின் புதல்வியான பத்மினிதேவியை மணந்து லலிதாம்பிகை, கௌரி, சேந்தன் என்னும் பிள்ளைகளைப் பெற்றனர்.

மைத்துனி மணிமேகலை பன்னாலையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளையின் புதல்வன் காசிப்பிள்ளையை மணந்து மகாலட்சுமி, திருநாவுக்கரசு, திருஞானசம்பந்தமூர்த்தி, சோதிலிங்கம், பாலலட்சுமி எனும் பிள்ளைகளைப் பெற்றனர்.

மைத்துனர் சிவதாசன் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் இவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்லப்பாவின் மகளாகிய சிவகுணநாயகியை மணந்தார்.

மைத்துனர் திருநடராசா சுழிபுரத்தைச் சேர்ந்த வைத்தியர் சங்கரப்பிள்ளையின் புதல்வி கோகிலாதேவியை மணந்து ஸ்ரீகாயத்திரி, கௌரி, ஐங்கரன், திருக்குமரன் எனும் பிள்ளைகளைப் பெற்றனர்.

மைத்துனர் வயிரவப்பிள்ளை பன்னாலையைச் சேர்ந்த நல்லதம்பியின் புத்திரியான இராசலட்சுமியை மணந்து லகுமதி, முகுந்தன், பாலமதி ஆகிய பிள்ளைகளைப் பெற்றனர்.

இளைய மைத்துனராகிய நகுலேஸ்வரன் அமரர் துரைரத்தினத்தின் சகோதரராகிய சபாரத்தினத்தின் மகள் மாலினியை திருமணஞ்செய்து சதீஸ், கமலினி, கௌரிசங்கர், சுபாஜினி, தர்சினி ஆகியோரை பிள்ளைகளாகப் பெற்றனர்.

இவரது ஆசிரிய சேவையை நோக்குமிடத்து 10.-09-1956 ஆம் ஆண்டு யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக முதல் நியமனத்தை பெற்றார்.அதனைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.10.1957 தொடக்கம் யா/வரணி மாணிக்க வித்தியாசாலையிலும் 20.01.1958 தொடக்கம் யா/நயினதீவு ஸ்ரீகணேசா வித்திசாலையிலும் ஆங்கில உதவி ஆசிரியராக கடமையாற்றினார். 15.03.1962 தொடக்கம் 31.12.1963 வரை பலாலி, நல்லூர் ஆசிரியர் காலாசாலைகளில் பயிற்சி பெற்று தமிழ் தராதரப்பத்திர ஆசிரியர் ஆனார். 01.01.1964 தொடக்கம் களுத்துறை சாந்த ஜோன் மகாவித்தியாலயத்திலும், 01.07.1968 தொடக்கம் மன்னார் பேசாலை மகாவித்தியாலயத்திலும் 01.02.1972 அம் ஆண்டு தொடக்கம் யா/பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திலும், 05.02.1973 தொடக்கம் யா/மாவிட்டபுரம் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும், 01.01.1982 தொடக்கம் யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்திலும் உதவி ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். 20.09.1982 தொடக்கம் யா/மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலையின் பதிலதிபர் ஆகவும் 01.02.1985 தொடக்கம் யா/கொல்லங்கலட்டி சைவ தமிழ் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். அநேக பாடசாலைகளில் தமிழ், கணித, ஆங்கில பாடங்களை நன்கு கற்பித்த அசிரியர் அவர்கள் 01.10.1990 ஆம் ஆண்டு தமது 34 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இவரது ஆசிரிய சேவை மகத்தானது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறை காட்டினார். ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார் செய்து சித்தியடையச் செய்தார். பாடசாலை நிர்வாகத்திலும் கலை கலாச்சார வைபவங்களிலும் சமய விழாக்களிலும் அதிபர் ஆசிரியர்கட்கு ஒத்துழைப்பினை வழங்கி அவர்களின் நன்மதிப்பினைப் பெற்றார்.

இவர் நோய்வாய்ப்பட முன்னர் பொதுச் சேவை பலவற்றில் ஈடுபட்டுள்ளார் தமது வதிவிடமான கொல்லங்கலட்டி கிளானைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியில் உள்ள ஞானவைரவர் ஆலய பரிபாலனசபையின் பொருளாளராகவும், வளர்மதி சன சமூக நிலையத்தின் பொருளாளராகவும் விளங்கியுள்ளார். ஆலய நித்திய நைமித்திய பூசைகள் கலை கலாச்சார நிகழ்வுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற ஆவன செய்துள்ளார். கிளானை வாழ் மக்களின் அன்பையும் நன்மதிப்பினையும் பெற்றார். திடகாத்திரமாக இருந்தவர் வெகு சீக்கிரத்தில் நோய் வாய்ப்பட்டமையினாலும் நாட்டின் சூழ்நிலையாலும், மேலும் பல சேவைகளை ஆற்ற முடியாமல் போய்விட்டது.

இவரது மனைவி, புத்திரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவரும் இவர்மீது மிகவும் அன்பு கொண்டவர்கள் இவரது மனைவி.

"மனைதக்க மான்புடையள் ஆகித் தற்கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப வாழ்ந்தவர். இதுகாலவரை எவருடனும் அதிர்ந்து பேசுவதை யாரும் கேட்டதில்லை. தமது கணவரை மிகவும் அன்புடனும் பண்புடனும் பேணி வந்தார். தமது கடமையில் என்றும் தவறாதவர் கணவரின் இறுதிக் காலம் வரை அருகில் இருந்து நன்கு பராமரித்துள்ளார். இவர்களது புதல்வர்களில் மூவர் வெளிநாட்டில் வாழ்ந்த போதும் அவ்வப்போது குடும்ப சகிதம் வந்து இவர்களுடன் தங்கி பாசம் கொண்டாடி மகிழ்ந்து சென்றுள்ளார்கள். தொடர்பாடல் சாதனங்கள் ஊடாகவும் அன்பை பரிமாறி ஆதரவாக இருந்து வந்துள்ளனர். மற்றும் இங்கே இருக்கின்ற புத்திரர்களும் அவர்களது குடும்பத்தினரும் அருகே இருந்து வேண்டிய ஒத்தாசைகளைப் புரிந்து வந்துள்ளார்கள். 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் விடுமுறை காலத்தில் எல்லாப் புதல்வர்களும் குடும்பங்கள் சகிதம் அருகில் இருந்து மகிழ்வித்தது அவருக்கு மிகவும் சந்தோஷத்தினை கொடுத்திருந்தது.

இவ்வண்ணம் தனது சகோதர உறவுகள் மனைவி வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்கள் யாவருடனும் மிகவும் அன்பு கொண்டு பழகியவர் நோய் வாய்பட முன்னர் சகல உறவினர்களின் நிகழ்வுகள் யாவற்றிலும் கலந்து சிறப்பு செய்தார். திடகாத்திரமும் நுண்ணறிவும் அஞ்சாமையும் கொண்ட பேராளர் அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்கள் நோய் வாய்ப்பட்டமையினால்நீண்டகாலம் இப்பூவுலகில் வாழாது 2012ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை அபரபக்க திருதியை திதியதனில் இரவு 8.15 மணியளவில் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள், ஊர் மக்கள் வருந்தி நிற்க இறைவன் திருவடி நீழலை அடைந்தார். இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வணங்கிப் பிரார்த்திப்போமாக.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆக்கம்,
திருமதி.மாலினி நகுலேஸ்வரன்,
ஓய்வு பெற்ற ஆசிரியை.

## மனைவியின் உள்ளத்து நீங்காத நினைவுகள்

ஆண்டுநல் ஐம்பத்தைந்தில் அன்புடன் கரம்பிடித்தீர்
அன்றிலிருந்து இன்றுவரை கண்ணுக்கு இமைபோலவே
கனிவுடன் காத்து வந்தீர் கருத்தொருமித்து நாமும்
பண்புடன் ஊர்போற்றவே பாசமாய் வாழ்ந்திருந்தோம்
உந்தனது உறவினர் போல் எந்தனது உறவுகளையும்
பண்புடன் மதித்து நீரும் பாங்குடன் பழகுவீர்
உறவினரை ஆதரிக்க என்னும் உறுதுணையால் தானிருந்தீர்
உடுக்கை இழந்தவன் கைபோல் என்றும் இடுக்கண் களைந்திடுவீர்
கண்ணியம், கடமை, கட்டுப்பாடு உந்தனின் உயிர்மூச்சினிலே
என்றுமே கலந்திருக்கும் கஞ்சிபோட்டு மடித்துவைத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயவெண்மை துலங்கிடும் வெள்ளைவேட்டி அணிந்த நின்
கோலமே என்றும் எந்தன் கண்ணிலே நிலைத்து நிற்குதையா
மக்கள் ஐவரையும் மற்றவர் மதிக்கும் வண்ணம் பற்றுடன்
வளர்க்க உறுதுணையாயிருந்தீர் ஒற்றுமையாயவர்கள் என்றும்
உற்றவர் போற்ற வாழ உதாரண பகிர்ந்தளிப்பீர்
அன்புடன் அறிவும் அவர்களிக்க "அன்பகம்" எனும் மனையை
அழகுடன் அமைத்து வைத்தீர் மீண்டும் நாம் அங்குசென்று
வாழ்ந்திட எண்ணியே நம்மக்களுமே நாட்டிலே நிகழ்ந்த போரில்
சேதமுற்றிருந்த வீட்டை சீருடன்திருத்திச் செப்பனிட்டிருக்கும்
வேளை இடைநடுவிலே இறைவன்டி சேர்ந்துவிட்டீர்.

தாய்க்குப்பின் தாரம் என்பர் - நின் தாயைப் போல் என்தனையும்
அம்மா என்றே அழைப்பீர் பிள்ளைகள் ஐவரையும் மற்றவர்
மதிக்கும்வண்ணம் திருமணம் செய்துவைத்தீர்
சீருடனவர்கள்வாழ உறுதுணையாயிருந்தீர்
எந்தன் தேவையாதும் என்றுமே கூறிவிடினும் எதுவுமே
குறைவிடாது எதனையுமுணர்ந்தே செய்வீர்
உந்தனது நிழலைசுற்றி என்றுமே வாழ்ந்திருந்தேன்
நின்னையே ஆண்டவனாய் நினைத்துமே
பணிகள் செய்தேன், அம்மாவென்றே எனை
அழைப்பீர் - இன்று உந்தன் அம்மாவைக்காண
என்னை தவிக்கவிட்டு சென்றதேனோ
மனைவிக்கும் மக்களுக்கும் மகிழ்வுடன்
ஓடியோடி உழைத்தபின்னர் நீண்டதோர்
ஓய்வெடுக்க இறையடி தேடிச்சென்றீர்
உந்தன் பணியை தொடர்ந்திட எண்ணி
பிள்ளைகளோடு பேரப்பிள்ளைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடன் வாழ்ந்திடவே உறுதுணையாயிருந்து
எந்தன் நினைவுடன் வாழ்ந்திடுவேன்
மீண்டும் பிறப்பென்று ஒன்றுவந்தால்
உம்முடன் சேர்ந்திருந்து பணி செய்திட
இறைவனை வேண்டிடுவேன்.
என்றுமே உங்கள் நினைவுடன்

**மனைவி**

## எம் கடன் தீர்ப்பதெப்போ?

அய்யா இனி இல்லை!..... எமக்காகவே என்றென்றும் ஓடி ஓடி உழைத்துக் களைத்ததனால் ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார். அழுதரற்றி ஆவதொன்றில்லை. அறிவுக்கு யதார்த்தம் புரிகிறது. உள்ளம் மட்டும் ஏனோ உணர மறுக்கிறது. தனிமைப் பொழுதுகளிலும், பழகியோரைக் காண்கையிலும் உள்ளத்தில் சிறு வலி ஊசியாய் குத்தி நிற்கும். நினைவுகள் எமைவிட்டுத் தனியாய் எங்கெங்கோ அலைந்துவரும்.

அய்யா எம் சிறு வயதுக் காலங்களில் வெளியூர்களில் பணி புரிந்துகொண்டிருந்தார். அப்போது பாடசாலை விடுமுறைக் காலம் வருகிறதென்றால் எமக்கெல்லாம் கொண்டாட்டம்தான். ஊரினில் அரிதான தின் பண்டங்கள், பழங்கள், என பலவும் அய்யாவுடன் சேர்ந்துவரும். விடுமுறைக் காலம் முழுவதும் கண்டிப்பும் அன்பும் விளையாட்டும் படிப்புமாய் விரைந்தே கழிந்தோடி அடுத்த விடுமுறை எப்போவென ஏங்க வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யா உள்ளூர் இடமாற்றம் பெற்று வந்தபோது எமது தேவைகளும் பல மடங்காயிற்று. அவற்றுக்கு ஈடுகொடுக்க அய்யா பாடசாலையும் தோட்டமுமாய் மாறிமாறி உழைத்த உழைப்பு சொல்லிலும் எழுத்திலும் அடங்கமாட்டாது. பின்னர் எலி வளையானாலும் தனி வளையென்று எமக்கே எமக்காய் ஒரு வீடு கட்டிக்கொள்வதற்காக மரங்கள் தறித்து, காணி திருத்தி, கிணறு வெட்டி, கல்லுடைத்து, கட்டிட பொருட்கள் தேடிச் சேர்த்து வீடு கட்டி முடித்து "அன்பகம்" என்று பெயரும் வைத்து, அங்கு குடிபுகுவதற்குள் அவர் பட்ட பாடுகளும், அவரது உழைப்பும்..... அப்பப்பா! அப்படியொரு உழைப்பு!

அய்யாவின் கையெழுத்து அச்சிட்டாற்போல அப்படியொரு அழகு. கடிதம் எழுதுவது அவருக்கு ஒரு கைவந்த கலை. மங்களகிரியில் கல்யாணமா! வீட்டுக்கு வர்ணம் தீட்டி அழகுபடுத்துவது எழுதாத ஒப்பந்தமாய், எப்போதும் அய்யாவின் பொறுப்பு.

அய்யாவின் இரசனைக்கு எல்லையே இல்லை. எதையுமே விட்டுவைப்பதில்லை. உணவை இரசித்து உண்பது அவர் வழக்கம். அவசரமாய் அள்ளிப்போட்டு, உருட்டி உள்ளே தள்ளி நாம் பார்த்ததில்லை. சிவாஜி படமென்றால் பார்க்கத் தவறுவதில்லை. ஆங்கிலப் படங்களும் மிக விரும்பிப் பார்ப்பதுண்டு. நாதஸ்வர இசையில் நாட்டம் மிகவுண்டு. அதிலும் தவில் இசையில் தனியாய் ஒரு மோகம். தவில் மேதை தட்சனாமூர்த்திக்கு கோவில் கட்டாத குறை! மேசையிலும் கதிரைச் சட்டங்களிலும் அய்யா எழுப்பும் தவிலோசைக்கு இரசிகர்கள் பலருண்டு.

அய்யா விளையாட்டையும் விளையாட்டாய் விட்டதில்லை! வீட்டு முற்றத்தில் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம்,(Criket) வைரவர் கோவிலடியில் கரப் பந்தாட்டம் என எல்லோருடனும் இணைந்து ஆடுவார். தாயம், ஆடும் புலியும், சீட்டாட்டம், இன்னும் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யாவுக்கு மிக விருப்பம். அத்தோடு உலக அளவில் நடைபெறும் துடுப்பாட்ட போட்டிகளின் நேர்முக வர்ணனைகளைத் தவறாது இரசிப்பதுண்டு. அவர் தனது இறுதி நாட்களிலும்கூட துடுப்பாட்டத்தையும் பிடித்த சில தொலைக்காட்சித் தொடர்களையும் ஆர்வமாய் இரசித்தார்.

அய்யா ஊர் கூடித் தேரிழுக்கும் வேளையிலே கைகட்டி நின்றதில்லை. வைரவர் கோவிற் பணிகளிலும், சனசமூக நிலையத்தின் வளர்ச்சியிலும் அய்யாவின் பங்கு ஊர் மெச்சும். சந்தர்ப்பத்திற்கு பொருத்தமாய் நகைச்சுவையை தெளிக்கும் அவரது இயல்பு ஊரிலுள்ள அன்பர்களை வெகுவாய்க் கவரும்.

அய்யாவின் வாழ்க்கையிலே அம்மாவின் பங்கு மகத்தானது. கேள்விக்கு இடமில்லாமலே ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் பாங்கு, எப்போதும் அவர்களுக்கிடையே இருந்தது. வீணான வாக்குவாதங்கள், சீறல், சினத்தல் அவர்களிடம் என்றுமே நாம் கண்டதில்லை.

அய்யாவின் நினைவுகள் அசைபோட்டால் முடிவில்லை!

அய்யா! எங்களுக்காய் நீங்கள் எடுத்த சிரமங்கள் மிக அதிகம்! உங்களிடம் பட்ட கடன்களை நாம் தீர்ப்பதெப்போ? இன்னொரு பிறவியிலா? அப்போதும் நீங்கள்தானே முந்தி நிற்பீர்கள்! உங்களோடு போட்டியிட யாரால் முடியும்!

என்றும் உங்கள் நினைவோடு
பிள்ளைகள்
லிங்கம், ரவி, ஆனந்தம்,
நந்தினி, இளமுருகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகள் அழியுமா? .......!

காலங்கள் விழுதென கற்றிட்டோம் உங்களிடமே!
வாழ்வளித்தீரே! மேலோங்க அறிவுரையும் தந்தீரே!
நன்றிசொல்லியே வாழ்வினை நகர்த்தி மகிழ்ந்திருக்க
ஒன்றிணைந்த கொடையென இறுமாந்த பேறல்லவா!

எக்காலமும் ஐந்தல்ல எம்பிள்ளைகள் பத்தென்றே
பக்குவமாய் வழிமுறைகள் பகிர்ந்தளித்த தந்தையே!
நேர்மைநெறி காத்திட்ட உள்ளத்தின் உறுதியில்
முகஞ்சுளியாத் தொண்டாற்றி எம்வழிகாட்டி தந்தீரே!

திக்கொன்று திசையொன்றாகி வாழ்ந்தநாம் ஒன்றாகி
இணைந்தபொழுதில் உவகை கொண்டு வாழ்த்தினீரே!
நோயுற்ற தேகத்திலும் நொந்தொடியா சக்தியோடு
பதட்டமில்லா மனமகிழ்வாக்கி வழியனுப்பி வைத்தீரே!

மீண்டுமாய் விரைவில் பார்த்திடலாமென்ற நினைவிற்கு
மீட்சியில்லையென தந்த செய்தி பொய்த்திடாதா?
மீளவில்லை துயரிலிருந்து மீட்டுகிறோம் நித்தமுமே
மீட்டெடுக்காத அறிவுரைகள் அத்தனையும் எம்வாழ்விற்கே!
பேறுபெற்றோம் „மாமாவாயென" பெருமைகொண்டே
பூட்டிநிற்கும் ஒன்றிணைவோடு மருமக்கள் நாமிங்கே
சிரம்தாழ்த்தி இறைபாதத்தில் இணைந்த உங்களின்
ஆத்மாவின் சாந்திக்காய் நித்தமுமாய் பிரார்த்திக்கிறோம்.!

உங்களின் பிரிவால் துயருறும்
மருமக்கள்
பவானி, மைதினி, காயத்ரி, பத்மா உமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது குஞ்சியப்பு பற்றிய நினைவுகள்

1955 ஆம் ஆண்டு நானும் தம்பி உமாகாந்தும் சிறுவராக இருக்கும் போது எமது வீட்டிற்குப் பக்கத்திலுள்ள "மங்களகிரி" வீட்டில் குஞ்சியப்பு, மனோன் அக்காவைப்பார்த்ததும், இவர்கள் திருமணம் செய்து முதன் முதல் கதிர்காம ஆலய தரிசனம் செய்யச் செல்ல இருந்த சமயத்தில் எமது தந்தையார் கேட்டுக் கொண்டதற்கிணங்கச் சிறுவன் உமாகாந்தைத் தம்முடன் அழைத்துச்சென்று நேர்த்திக்கடனை நிறைவேற்றியதும், தம்பி முதன் முதல் மனோன் அக்காவை "அம்மா" என வாய்திறந்து அழைத்ததும்,

1958 எமது தந்தையார் இறந்த போது நயினாதீவில் இருந்து குஞ்சியப்புவும், மனோன் அக்காவும் மிகவும் கவலையுடன் வந்து எங்களை ஆறுதல் படுத்தியதும் எமது உடல், உள வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும் கவனமெடுத்தும், உதவிகள் புரிந்தும், 1967ல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் எண்கணித பாடத்திறமை குறைந்த எனக்கு அதனைக் கற்பித்துச் சித்தியடையச் செய்தமையும்,

1971ல் ஆசிரியர் பதவிகிடைத்த போது அளவற்ற மகிழ்ச்சியடைந்ததும், அறிவுரை கூறியதும் 1974ல் எமது திருமணத்தின் பின் பிள்ளைகளை அவ்வப்போது பாராட்டிச் சீராட்டிப் பாலூட்டிப் பராமரித்தமையும், கல்வி கற்பித்தமையும், சங்கரின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யா/மகாஜனாக் கல்லூரியில் அதிக புள்ளிகள் பெறச் செய்தமையும் எமது பிள்ளைகள் யாவரும் ஐயாமாமா என அழைத்து அன்பு கொண்டதும்,

1995ம் ஆண்டு ஒக்ரோபர் யாழ் இடம் பெயர்வின் பின் நாங்கள் கிளிநொச்சி சென்றதும், யாழ்ப்பாணம் அதிகம் வரமுடியாமற் போனதும் இடைக்கிடை சென்று பார்த்ததும்,

2009 ஒக்ரோபரின் பின் மீண்டும் நாம் யாழ் வந்ததும் குஞ்சியப்புவைப் பார்த்துக் கவலை கொண்டதும் தற்போது மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தமாக இருக்கிறார் என அறிந்து சென்று பார்த்ததும் கதைத்ததும் ஞாபகம் வருதே.

அன்னாரின் பிரிவால் மிகவும் துயர் அடைகின்றோம். அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

மாலினி
ஈஸ்வரன் குடும்பம்

## எங்கள் அன்பு அப்பப்பா அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம்

என் அன்பு மிகு அப்பப்பா இறந்ததை நினைத்து நான் வருந்துகிறேன் சிறுவயதில் எனக்கு பாடம் சொல்லித் தருவீர்களே எனக்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்றவற்றையும் சொல்லித் தருவீர்கள். நான் படித்து முதலிடம் பெற்றால் பணப்பரிசுகள் எல்லாம் தருவீர்கள். விளையாட்டு, வேறு நிகழ்ச்சி ஏதாவதில் வென்றால் பரிசுகள் தருவீர்கள். இப்போது இவ்வுலகை விட்டு மறைந்து விட்டீர்கள். இப்பூவுலகில் உங்கள் நாமம் அழியாது மறையாது அப்பப்பா அப்பப்பா என அழைக்க யாருமில்லையே எங்களை விட்டுப் பிரிந்தது ஏன்? மறைந்தது ஏன்? நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தது பெருந்துயரத்தை தருகிறது. நீங்கள் இறப்பதற்கு இரண்டு மணிநேரத்திற்கு முன் நான் மீசாலையில் நின்றேன் என்னை வரும்படி அம்மா போனில் அழைத்தார் அப்பப்பாவிற்கு சுகமில்லை வரும்படி சொன்னார். நானும் வந்தேன் என்னுடன் நன்றாக அப்பப்பா கதைத்தார் என்னைப்பார்த்து அப்பப்பா கொலசிப்மாக்ஸ் எப்ப வரும் என எல்லாம் விசாரித்தார். அப்பப்பா எம்மைவிட்டு பிரிந்ததால் பெருந்துயர் அடைகின்றேன். எங்கள் இதயங்கள் உடைய, கண்ணில் நீர் சொரிய நீங்கள் போனதிசைபார்த்துப் புலம்புகிறோம். போய்விட்டீர் எம்மனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிக்க மீண்டும் வரமாட்டிங்களோ அப்பப்பா. என்றும் உங்களை நான் மறக்கேன். இப்பொழுது நான் கொலசிப் பாஸ்பண்ணி விட்டேன் அதை கேட்டு சந்தோசப்பட நீங்கள் இல்லையே. அப்பப்பா, நீங்களும் அப்புவும் கடவுளாக இருந்து என்னை ஆசீர்வதியுங்கள். எங்கள் தங்கை, தம்பியின் கல்வியிலும் நீங்கள் ஆவலாக இருப்பீர்கள்.

உங்களை இழந்து நாம் மிகவும் கவலையடைகின்றோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளை வணங்குகின்றோம்.

**நாகநர்த்தனன்**

**தர்ஷனா**

**நாககீர்த்தனன்**

## எங்கள் அன்பான சின்னத்தான்

சின்னத்தான் என எம்மால் சிறப்பாகச் சொல்லிடும்
அன்பான எங்கள் அத்தான் சின்னக்காவை மணம் செய்து
சீருடனே வாழ்ந்துநல்ல நண்பனாய் வழிகாட்டியாய்
ஆசிரியராய் அறிஞனாய் உறவுகள் தனைப்பேணி
ஊர்போற்றும் உத்தமராய் சீர்மிகுசெல்வங்கள் தனைச்
சிறப்புடனே வாழச்செய்து கடமையும் கண்ணியமும்
கருத்துடனே கல்விச்சேவையும் சமூகநலமும் ஆலயப் பணியும்
சந்தோஷமாய்த்தான்செய்து வாழ்வாங்கு வாழ்ந்துநல்ல
வளமுடனே வாழ்கையிலே நோய்வந்து நொந்துதான் போனீரே
வைத்தியங்கள் பலசெய்தும் காப்பாற்ற முடியவில்லை
மனங்கலங்கி வருந்துகின்றோம் அக்கா குடும்பத்தவர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் கூறுகின்றோம். இறையடியின் நிழலிலே
சின்னத்தான் சாந்திபெற எந்நாளும் இறைவனை நாம்
வேண்டியே தொழுதிடுவோம்.

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**அன்பு மைத்துனர்கள், மைத்துனிமார்.**

**மாமனோடு மகிழ்வுடன் மங்களகிரியில் களித்த நாட்கள்**
**அனுபவித்த நினைவினை மீட்டிடும் மருமக்கள்**

எங்களின் அன்பிற்குரிய மாமா
மங்களகிரியில் நாமும் மகிழ்வுடன்
வாழும் நாளில் கனிவுடன் கண்டிப்புமாய்
களிப்புடன் உறுதுணையாக நின்றீர்
எங்கள் ஐங்கரன் எழுத்தறிய ஏடுதொடக்க
எண்ணி ஐங்கரன் ஆலயத்தில் எம்முடன்
இணைந்திருந்தீர் ஆலய திருவிழாக்கள்
பண்டிகை நாட்களில் மகிழ்வுடன்
உறவினர் ஒன்றுகூடி சபையிலுண்ட
உணவுகளும் பகிர்ந்த உணர்வுகளும்
மறக்குமா எங்கள் நெஞ்சம்
உங்கள் பிரிவென்ற செய்திகேட்டு
அதிர்ந்தோம். கலங்கி நின்றோம்
என்றும் எங்கள் நினைவில்மாறாத
நிகழ்வுகளை எண்ணி உங்கள்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

மருமக்கள்
காயத்திரி, கௌரி,
ஐங்கரன், திருக்குமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமாவுடன் இருபாலை வீட்டில்

மாமாவுடன் இருபாலை வீட்டில் இடம்பெயர்ந்த நேரத்தில் வசித்த நினைவுகள் ஏராளமானவை. அவர் உறவினருடன் பாசமாகப் பழகும் தன்மை உறவுகளை மதிக்கும் தன்மை என்பன இயல்பிலே வாய்க்கப்பெற்ற மனிதன்

அந்த நேரத்தில் அக்கா A/L படித்துக் கொண்டிருந்தார் அண்ணாவும் A/L முதலாம் வருடத்தில் இணைந்திருந்தார் நான் ஆண்டு எட்டுபடித்துக் கொண்டிருந்தேன். மாமா இயல்பாகவே எங்களை கல்வி கற்க வேண்டியதன் முக்கியத்தைப் பற்றி கூறி ஊக்குவிப்பார். யுத்த காலமாகையால் அண்ணா யாழ்ப்பாணம் ரியூசனுக்கு போய்வர பிந்தினால் பதற்றத்துடன் ஆவலாக காத்திருப்பார். அவர் எப்பொழுதும் ஏதாவது விடயத்தைப்பற்றி சுவராஸ்யமாகப் பேசிக் கொண்டிருப்பார்.

அவர் கண்டிக்க வேண்டிய நேரங்களில் கண்டிப்பார். அவர் எமது பேரர்களில் ஒருவரான கந்தையா பட்டா, போன்று எப்பொழுதும் முயற்சியாக இருப்பார் சிறுவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஊக்குவித்து கற்பிப்பார் புத்தகங்கள் வாசிப்பார். ஓய்வு நேரங்களில் மக்கள், மைத்துனருடன் 304 என்ற வகையான சீட்டாட்டம், சதுரங்கம், டான் போன்ற விளையாட்டுக்கள் விளையாடுவார்.

அதேவேளை சரஸ்வதி பூசை பிறந்தநாள் போன்ற நிகழ்வுகளை கொண்டாட ஊக்குவிப்பார் அவரது அறுபதாவது பிறந்ததின கொண்டாட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தில் மிக்க மகிழ்ச்சி எல்லா சொந்தக்காரர்களையும் அழைத்து மிகவும் பாசமாக எல்லோருடனும் சுவாரஸ்யமாகப் பேசிமகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாம இடப்பெயர்வின் பொழுதும் எங்களையும் தன்பிள்ளைகள் போல் கவனித்து செய்ய வேண்டியவற்றை செய்தார் அதனை எப்பொழுதும் மறக்க முடியாது.

அவரால் நடமாட முடியும் வரை எல்லா உறவினரையும் இடையிடையே சென்று சுகம்விசாரிப்பது அவரது நல்ல பழக்க வழக்கங்களில் ஒன்று இறுதியில் தூரம் காரணமாக மாமாவை இடைக்கிடை சந்திக்கவில்லை என்பதும் மிகுந்த மன வேதனையைத் தருகின்றது.

இப்படிப்பட்ட நல்லமாமாவை நாங்கள் இழந்தது மிகவும் மன வேதனை மாமாவின் ஆத்மா சாந்திக்காக இதயபூர்வமாக பிரார்த்திக்கின்றோம்.

வகு,
முகுந்தன்,
பாவேஸ்

**அன்பான ஐயா மாமா!**
சின்னஞ் சிறுவனாய் வந்த என்னை
உமது நெஞ்சிற் துயிலவைத்துச்
சின்னச் சின்னக் கதைகள் சொல்லி
இனிய நல் உணவும் ஊட்டி
சிரித்தமுகமும் நகைச்சுவையுமாய்க்
கனிவுடனே கணிதமும் தமிழும்
கற்பித்தென்னை உயரவைத்துக்
கருத்துடனே ஆதரித்தீர்.

சகோதரர்கள் நாங்கள் எல்லாம்
உங்கள் வீட்டில் வாழ்ந்துள்ளோம்
சந்தோஷமாய் உபசரித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்குருவாய் அமைந்து நல்ல
சதுரங்கம், கிறிக்கெற் என
விளையாட்டுக்கள் பற்பலவும்
பண்புடனே பழகவைத்தீர்
பாசமுடன் நாமிருந்தோம்.

காலத்தின் கோலத்தால்
நாம் சென்றோம் வன்னிக்கு
பல்கலைகள் கற்கவென
நான் வந்தேன் யாழ்ப்பாணம்
ஆனந்தம் அடைந்து நல்ல
அறிவுரைகள் பல கூறி
ஆறுதலும் தந்தீர்கள்
அகமகிழ்ந்து நான் இருந்தேன்
இன்று நான் வெளிநாட்டில்
இருந்திடினும் உங்களுடன்
தொலைபேசியிற் கதைத்திடுவேன்
வந்துதான் பார்த்தேனே
மனங்கலங்கி நின்றேனே
அம்மாவிடம், அப்பாவிடம்
உங்கள் நலம் கேட்டறிவேன்
கேட்டவுடன் கதைக்கவென
உடனெடுப்பேன் தொலைபேசி
என்றாலும் உங்களுடன்
கடைசி நேரம் கதைக்கவில்லை
நினைத்து தான் பார்க்கின்றேன்
கவலையுடன் நானுமே.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைக்கூறி, உங்கள் ஆத்மா சாந்தியடைய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புப் பேரன்

ந.கௌரிசங்கர் (லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரப்பிள்ளைகளின் பிரிவுத்துயர்**

அன்பிற்கு அன்னையாய் அறிவிற்கு தந்தையாய்
பண்பிற்கு ஆசானாய் சிந்தையில் நிறைந்தீரே எம்
எந்தையாம் அம்மையாவே கல்வியில் உயர்ந்திடவே
பல்வகை உதவிசெய்தீர் தொல்லையிலா வாழ்வுவாழ
எல்லையிலா அன்புடனே என்றுமே காத்து நின்றீர்
முத்தினைப் போன்ற எழுத்து முகத்தில் புன்சிரிப்பு

எத்தனை வலியும் தாங்கும் என்றுமே அஞ்சா நெஞ்சம்
பத்தரை மாற்றுத் தங்கம் இத்தரை போற்றும் தங்கம்
இனிய எம் அம்மையாவே ! இன்முகம் காட்டி எம்மை
இயல்புடன் வரவேற்பீர்கள் பசித்திட முன்பே எமக்கு
பலவகைப் பட்சணங்கள் புசித்திட தந்தீர் - நாமும்
எழுத்தினை அறிந்திடவே எம் கரத்தினைப்பற்றி அரிசியில்
எழுதுவித்தீர் அ, ஆ... என்று பண்டிகை வந்தால் எமக்கு
பட்சணம் பலவும் தருவீர் புத்தாடை வாங்கித்தருவீர்
பலகலை நாமும் கற்க பலவகை உதவி செய்தீர்
கவின்மிகு ஓவியங்கள் கருத்துடன் வரைந்திடுவீர்
கற்பனை வளத்தினாலே பலகைப்பணி கற்றுத்தந்தீர்
துடிப்புடன் வாழ்ந்திடவே துடுப்பாட்டம் தன்னைப்பற்றி
விளக்கமாய் சொல்லித்தந்தீர் கணிதமும், ஆங்கிலமும்

கவின் மிகு கலைகள் யாவும் விருப்புடன் விளக்கமாக
விரைந்துமே கற்பித்தீரே எம் உயர்வுக்காக அயராது
உழைத்த உத்தமரே இறுதியாய் கூட எமக்கு
படியுங்கள் என்றே அறிவுரை கூறிவிட்டே எம்மை
நீங்காத்துயரினில் மூழ்கிடவே துயிலினில் மூழ்கிவிட்டீர்
நீங்கள் காட்டிய நேர்வழியில் நாங்கள் என்றுமே தொடர்ந்திடவே
இறையடியின் கீழிருந்தே என்றும் எம் நினைவில் நின்றே
நல்வழிதனை காட்டிடவே உங்களை இறைவனாய்
எண்ணியே பணிந்து நிற்போம்

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனது அன்பிற்குரிய ஐயா**

நான் எனது இளமைக்காலத்திலிருந்தே அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களை ஐயா என்றே அன்புடன் அழைப்பது வழக்கம். அன்பகம் என்பது அவர்களது வீட்டின் பெயர் அந்த வீட்டில் அன்புக்கு என்றுமே குறைவில்லை. குட்டி (இளமுருகன்) உடன் அவர்களுடைய வளவிற்குள் ஓடித்திரிந்து விளையாடுவது வழக்கம். ஐயா கைபட்டு அவருடைய வளவு இருந்த மாதிரியை நினைக்கும் பொழுது தாங்க முடியாத வேதனையாக இருக்கிறது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எங்களால் மறக்க முடியாத காலம். திக்குக்கொருகுடும்பம், திசைக்கொரு குடும்பமாக பெரிய வீடு "மங்கள கிரி" "அன்பகம்" எங்களது வீடு, பழைய வளவு, தோட்டம் துரவு என எல்லாவற்றையும் விட்டு உயிர்பிழைத்தால் போதுமென ஓடியகாலம்.

இப்பொழுது, 21 வருடங்களுக்குப் பின்னர் நாங்கள் காலங்காலமாக வாழ்ந்த இடங்களுக்குத் திரும்பவும் வந்திருக்கின்றோம். ஐயா வீடும் வளவும் இப்பிலிப்பில் மரங்களால் நுழைய முடியாத அளவிற்கு இருந்த இடம் தெரியாமற் காடுமண்டிக்கிடந்தது.

எத்தனையோ வகையான மரங்களை அவர் நட்டிருந்தார் மாம்பழக்காலத்தில் ஆசை தீரும் அளவிற்கு குட்டி, ரவி, ஆனந்தருடன் சேர்ந்து நானும் மாம்பழம் சாப்பிட்ட நினைவு நேற்று நடந்தது போல இருக்கின்றது. ஊரவர் எல்லோரும் ஐயா ஒரு பள்ளிக்கூட வாத்தியார் மட்டுமல்ல தோட்டச் செய்கையிலும் அவர் ஒரு வழிகாட்டும் ஒரு ஆசிரியர்தான் என்று சொல்வார்கள்.

பெரியவளவுப் பெரிய படலைக்கருகில் இப்பொழுது தில்லை அண்ணாவின் காணி பனந்தோப்பாக இருந்தது, இந்தக் காணித்துண்டும் ஐயா கைபட்டு நல்லதொரு தோட்டக்காணியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி இருந்தது. ஐயா இந்தக் காணியில் வெங்காயம், தக்காளி, மிளகாய், எனப் பயிரிடுவது வழமை. தோட்டச் செய்கையில் இவர் போடுகின்ற வாய்க்கால் வளங்கள் பாதையாற் போவோரது பார்வையிற்படும். மிகவும் நுட்பமான தோட்டச் செய்கைக்காரர்கள், ஒரு பள்ளிக்கூட வாத்தியாருடைய வேலை, நாங்கள் தோட்டக்காரராக இருந்தும் எங்களை மிஞ்சிவிட்டது என்பார்கள்.

எனது தகப்பனார் நடராசா, ஐயா மேல் நல்ல நம்பிக்கை வைத்திருந்தார். வாத்தியாருடைய நேர்மைக்கு வேறு ஆள் கிடையாது என அடிக்கடி சொல்லுவார் எங்களுடைய தகப்பனார் ஐயாவிற்குரிய தோட்டக்காணிக் குத்தகைக் காசை மூன்று, நாலு வருடங்கள் சேர்த்துக் கொடுப்பது வழமை. ஒரு தடவை ஒருவருடத்திற்குரிய காசை எனது தகப்பனார் கூடுதலாகக் கொடுத்து விட்டார் ஐயா வீடு தேடி வந்துக் கணக்கைச் சரிபார்த்துக் கூடுதலான காசைத்திருப்பிக் கொடுத்தார். ஐயா எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கு முறையைக் கைக்கொண்டு வாழ்ந்தவர்.

எந்நேரமும் சிரித்த முகமாய் இருப்பார். நோய்வந்து அவரைத் துன்புறுத்தி விட்டது. அவர் தற்போது எங்களுடன் இல்லாதது எங்கள் எல்லோரையும் தவிக்கவிட்டுப் போனது போல உள்ளது. அன்னாரது குடும்பத்தவர்க்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்

நடராசா தெய்வேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Angiogam

இன்றைய உலகில் மனிதனைத்தாக்கும் பிரதான நோய்களில் இருதய முடியுரு நாடியும் (Ischemic heart disease) ஒன்றாக அமைகிறது.

மனித இருதயம் தசைகளினால் ஆக்கப்பட்ட மனித உடலெங்கும் குருதியை அனுப்புகின்ற ஓர் பம்பியாகத் தொழிற்படுகின்றது. இது தனக்குத் தேவையான குருதி வழங்கலை முடியுரு நாடி மூலம் பெற்றுக்கொள்கிறது. இந்த முடியுரு நாடிகளில் தடங்கல்கள் வரும் போது (உதாரணமாக கொலஸ்ரோல் படிவுகள், குழாய்களில் சுருக்கம் ஏற்படல்) நோயாளிகள் மாரடைப்புடன் வாழ வழிவகுக்கிறது.

இதனை உறுதிசெய்வதற்கும் முடியுரு நாடிகளின் சுருக்கத்தின் அளவு மற்றும் அமைவிடத்தை அறிவதற்கும் தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் Coronary Angiogram (கொடிராணரி அஞ்சியோகிராம்) எனும் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

Angiogram (அஞ்சியோகிராம்) என்றால் என்ன?

Angiogram என்பது குருதிக்குழாயினுள் ஒரு விஷேட சாயமூட்டியை (dye) செலுத்திய பின் அக்குருதிக் குழாய்களினூடாக இரத்த ஓட்டத்தினை அறியச் செய்யப்படுகின்ற ஒரு விஷேட xray கதிர்ப்படமாகும்.

இச்செயன்முறையை இருதய முடியுரு நாடிகளின் இரத்த ஓட்டத்தை அறியச்செய்யப்படும்போது அதனை Coronary Angiogram என்கிறோம்.

இந்த Coronary Angiogram ஆனது இருதய நாடி நோய்களை அறிவதற்கு ஓர் மிகச்சிறந்த தொழில்நுட்பமாகும். இதன் மூலம் பெறப்படும் படங்கள் முடியுரு நாடிகளில் ஏற்பட்டுள்ள அடைப்புக்களின் அளவு பற்றியும் அமைவிடம் பற்றியும் அதன் தீவிரத்தன்மை பற்றியும் துல்லியமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுபடுத்துகின்றது. இந்த பரிசோதனை முடிவின் உதவியுடன் இருதய வைத்திய நிபுணர்கள் இதய நோயாளர்களுக்கான சிறந்த சிகிச்சை முறையினைத் தெரிவு செய்யக்கூடியவாறு உள்ளது.

அவையாவன: 1. மருந்து மூலமான சிகிச்சை Medication

2. Balloon angioplastry and coronary stenting.

3. குருதிக்குழாய் மாற்றீட்டு சத்திர சிகிச்சை Coronary artery by pass surgery

Coronary Angiogram பரிசோதனைக்கு இதயநோயாளிகள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர்?

1.இருதய நோயாளி ஒருவருடைய இதயத்திற்கு படிப்படியான வேலையைக் கொடுத்து இருதயத்தின் தொழிற்பாட்டை E.C.G மூலம் அளவீடு செய்து தேவைப்படின் angiogram பரிசோதனை செய்யப்படும் (Exercise Tolerance Test)

2.மாரடைப்பு ஏற்பட்ட நோயாளிகள்

3.மருந்து மூலமான சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போது தொடர்ச்சியான அதிகரித்த நோய் நிலமையுடைய நோயாளிகள்.

Coronary Angiogram பரிசோதனை செயன்முறை.

இச்செயன்முறையானது மணிக்கட்டு நாடி (Radial artery) அல்லது தொடை நாடி (Femoral artery) ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. எனவே அந்நாடிகளின் மேலுள்ள தோலினூடாக விறைப்பு மருந்து (Local Anesthesia) செலுத்தப்படுகின்றது.

2-3mm விட்டமுள்ள மெல்லிய நீண்ட குழாயானது (catheter) மேற்கூறப்பட்ட நாடியினுள் தோலினூடாக அனுப்பப்படும்.

விஷேட கதிர்ப்படக் கருவியின் (Fluroscopy) உதவியுடன் அக்குழாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதயத்திற்கு குருதிவழங்கும் முடியுரு நாடியின் ஆரம்பம் வரை அனுப்பப்படுகிறது.

பின்னர் சிறிய அளவு விஷேட கதிர்பட நிறமூட்டி அக்குழாயினூடு செலுத்தப்படுகின்றது. இவ்வாறு அனுப்பப்படும் நிறமூட்டி மூலம் முடியுரு நாடிகளில் ஏற்பட்டுள்ள அடைப்பின் அமைவிடம், அளவு, தீவிரத்தன்மை கதிர்வீச்சுப் படத்தின் மூலம் துல்லியமாகக் காட்டப்படுகின்றது. இந்த Xray படங்கள் Angiogram எனப்படும்.

பரிசோதனை முடிவடைந்தபின் நோயாளர்கள் சிறிது நேரம் ஓய்வாக இருத்தப்படுவர். அப்போது அவரது குருதிஅமுக்கம், இருதய துடிப்பு வீதம், குழாய் செலுத்தப்பட்ட பகுதி என்பன தொடர்ந்து அவதானிக்கப்படும்.

Coronary Angiogram பொதுவாக மேற்கொள்ளப்படும் பாதுகாப்பான பரிசோதனை எனினும் பின்வரும் சிக்கல்களை எதிர்நோக்கவேண்டி நேரலாம்.

1.அதிக குருதிப்பெருக்கு (Bleeding)  2. கிருமித்தொற்று

3.ஒவ்வாத்தன்மை

4.ஒழுங்கற்ற இருதயத் துடிப்பு (Arrythmia)

5.மாரடைப்பு

6.குழாய் செலுத்தப்பட்ட இடத்தில் அசௌகரியத்தன்மை.

## பாரிசவாத நோயாளர்கள் அறிந்திருக்க வேண்டியவை (Stroke)

மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் திடீரென ஏற்படும் பாதிப்புக்கள் (இரத்தக்கசிவு அல்லது குருதிக்குழாய்களில் அடைப்பு) காரணமாக மூளையின் நரம்பு மண்டலத்தில் ஏற்படும் தாக்கங்களால் பாரிசவாதம் (Stroke) ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிசவாத நோயால் பாதிக்கப்படக் கூடியவர்கள்

1.புகைத்தல் பழக்கவழக்கம் உடையவர்கள்.

2.உயர்குருதியமுக்க நோயாளிகள்.

3.அதிகூடிய நிறையுடையவர்கள் (obese).

4.அதிகூடியளவு கொலஸ்ரோலை உடையவர்கள்.

5.உடற்பயிற்சியின்மை.

6.அளவுக்கதிகமான மதுப்பழக்கம் உடையவர்கள்.

7.கட்டுப்பாடற்ற சலரோக நோயாளிகள்.

## பாரிசவாத நோய்க்குள்ளானவர்கள் பின்பற்றவேண்டியவை.

01) தோல் அண்டும் பகுதிகளில் ஏற்படும் புண்ணை (Bed sores) தவிர்ப்பதற்கான முறைகள்.

1. பாரிசவாத நோயாளர்கள் தொடர்ந்து ஒரே நிலையில் படுப்பதால் இது உண்டாகும் எனவே நோயாளியை 2 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை திருப்பிவிடல் வேண்டும்.

2.நோயாளியின் பின்புறத்தை அடிக்கடி சோதிக்க வேண்டும்.

3.படுக்கை விரிப்புகள் முதலியவற்றை சுத்தமாகவும் மடிப்புகள் அற்ற முறையிலும் பேணப்படல் வேண்டும்.

4.விஷேடமான மெத்தைகளைப் பயன்படுத்தலாம் (Water mattress/air mattress)

02) வாயை சுத்தமாக வைத்திருத்தல்.

1. ஒரு நாளில் ஆகக்குறைந்தது 2 தடவையாவது வாயைக் கழுவவேண்டும்.

2. வாயில் உமிழ்நீர் போன்ற சுரப்புக்கள் தேங்கிநிற்குமாயின் அதை ஒரு உறிஞ்சி மூலம் எடுக்க வேண்டும்.

03) சலம் வெளியேறுவதில் கவனமெடுத்தல்.

இந்நோயாளிகளில் அனேகமானவர்களுக்கு சலம் அவர்களை அறியாமலே கட்டுப்பாடின்றி வெளியேறுவதால்

1.சலக்குழாய்களை (Urinary catheter) பயன்படுத்தலாம். இதனை 2-4 கிழமைகளிந்து ஒருமுறை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் சலத்தில் கிருமித்தொற்று ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.சலத்தை இடைக்கிடை சோதித்து கிருமித்தொற்றிருப்பின் சிகிச்சை அளித்தல் வேண்டும்.

04) மலம் வெளியேறுவதைப் பேணல்.

1. மலம் தன்னையறியாமல் கட்டுப்பாடின்றி வெளியேறின் உடனுக்குடன் துப்பரவு செய்தல் வேண்டும்.

2. வசதி இருப்பின் pampers பயன்படுத்தலாம்.

3. மலச்சிக்கலைத் தவிர்க்க அதிக நார்ச்சத்துள்ள உணவு வகைகளைக் கொடுக்கவேண்டும். முக்கியமாக அதிக மரக்கறி பழவகைகளை நசித்து திரவநிலையில் ஊட்டவேண்டும்.

4. மலச்சிக்கல் இருப்பின் பேதி மருந்தினை உள்ளெடுக்கலாம்.

05) கிரமமாக உடற்பயிற்சி செய்தல் வேண்டும் (Regular physiotherapy) இவ்வாறு செய்யாவிட்டால் இந்நோய்க்காரர் பாரதூரமான சுருங்கல்கள் (Contractures) அல்லது அங்கவீனங்கள் (Deformity) ஏற்பட்டு எதிர்காலத்தில் அங்கங்களைப் பயன்படுத்த முடியாது போகலாம்.

06) தேவையேற்படின் இவர்கள் நடப்பதற்கு ஊன்றுகோல் (Walking stick) Walker போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

07) உணவுட்கொள்ளலில் எடுக்கவேண்டிய பராமரிப்பு.

1. உணவை உள்விழுங்கும் சக்தி (Gag reflux) போதுமானதாக இல்லாமல் இருப்பின் அந்நோயாளிக்கு மூக்கினூடாக இரப்பைக்கு குழாயினைச் செலுத்தி பலதரப்பட்ட நீராகாரங்களைக் கொடுத்துக் கொள்ளப்படும்.

2. உணவைக் கொஞ்சம் கொஞ்சமாக செலுத்த வேண்டும் அதிகளவான உணவுவகைகளைச் செலுத்தின் அது சுவாசக் குழாயினுள் சென்று (Aspiration) உயிராபத்தை விளைவிக்கலாம்.

08) பாரிசவாத நோயாளிகளுக்கு இதர நோய்களான உயர்குருதியமுக்கம், சலரோகம், மாரடைப்பு, குருதியில் அதிகளவு கொலஸ்ரோல் காணப்படின் அதற்கான தகுந்த சிகிச்சை வழங்க வேண்டும்.

09) புகைப்பிடிக்கும் பழக்கம், மது அருந்துதல் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

Dr சுபாஸ் (பேரன்)

Dr அனித்தா சுபாஸ் (பேத்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாவட்டத்திலுள்ள வைத்திய மற்றும் ஏனைய நிறுவனங்களின் தொலைபேசி இலக்கம்

| | | |
|---|---|---|
| 01. | யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் | 021 222 2262 |
| 02. | யாழ் போதனா வைத்தியசாலை 021 222 3348, | 021 222 2261/2 |
| 03. | பிரதி மாகாண சேவைகள் பணிப்பாளர் | 021 222 2267/8 |
| 04. | UNHCR | 021 222 2005 |
| 05. | நீர்வேலி நெர்சிங்கோம் | 021 222 2263 |
| 06. | கோலிகுறொஸ் | 021 222 2512 |
| 07. | அப்பலோ வைத்தியசாலை | 021 222 3305 |
| 08. | கோண்டாவில் பஸ்டிப்போ | 021 222 2207 |
| 09. | TRRO | 021 222 2416 |
| 10. | யாழ் ரெலிகொம் | 021 222 2211 |
| 11. | இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் | 021 222 2561 |
| 12. | தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை | 021 222 3742 |
| 13. | யாழ் மாநகரசபை | 021 222 2275 |
| 14. | யாழ் மின்சாரசபை | 021 222 2496 |
| 15. | சுன்னாகம் மின்சாரசபை | 021 224 0301 |
| 16. | யாழ் செயலகம் | 021 222 2235 |
| 17. | யாழ் பிரதேச செயலம் | 021 222 2209 |
| 18. | யாழ் பொலிஸ்நிலையம் | 021 222 2222 |
| 19. | யாழ் நீதிமன்றம் | 021 222 2357 |
| 20. | யாழ் தபாலகம் | 021 222 2250 |
| 21. | யாழ் நூலகம் | 021 222 2019 |
| 22. | யாழ் மதியபேருந்து நிலையம் | 021 222 2281 |
| 23. | சம்பந்தர் சிகிச்சை நிலையம் | 021 222 7259 |
| 24. | போரூட் | 021 222 2177 |
| 25. | உதயன் | 021 222 9944 |
| 26. | வலம்புரி | 021 222 3387 |
| 27. | தினக்குரல் | 021 222 2127 |
| 28. | எஸ்போ எயார் | 021 222 6297 |
| 29. | லயன்ஏயார் | 021 222 2504 |
| 30. | மனிதஉரிமை ஆணைக்குழு | 021 222 2021 |
| 31. | யாழ் அம்புலன்ஸ் | 021 222 9792 |
| | | 021 222 2561 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

திருக்குறள்

எமது பாசமிகு குடும்பத் தலைவர் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிக்கரம் நீட்டிய உற்றார் உறவினர் நண்பர் அயலவர்க்கும் அல்லலுற்று ஆற்றாது நின்ற போது ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும் தந்தி தொலை பேசி மூலம் அநுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து மலர் அஞ்சலி செலுத்தியோர்க்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் அநுதாபம் தெரிவித்தோருக்கும் துயரில் சரீர உதவி களைச் செய்த உத்தமர்க்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்தித் தோருக்கும் இம்மலரைச்சிறப்புற அச்சிட்டு வழங்கிய சுன்னாகம் மகிந்தன் கணனி அச்சகத்தினருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

*நன்றி*


இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ

கிளானை கொல்ல

## அமரர் துரைரத்தினம் மனைவி வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

ப்லாங்கலட்டி வன்னிராஜமுதலி வழித்தோன்றல்

சாங்கரப்பிள்ளை

சின்னத்தம்பி
+
பூதாத்தைப்பிள்ளை

கந்தையா
+
பிரகதசுந்தரகுசாம்பாள்
இராசநாயகி அம்பாள்

சரவணமுத்து
+
மரகதாம்பாள்

வயிரவப்பிள்ளை
+
இராசலட்சுமி

நகுலேஸ்வரன்
+
மாலினி

இராஜேஸ்வரி❋
+
கல்யாணசுந்தரம்

சிவகுமார்❋
+
சாந்தினி❋

இராசலட்சுமி
+
மகேஸ்வரன்

பிரகதசுந்தராம்பாள்
+
கந்தையா❋

தனலட்சுமி
+
சரவணபவானந்தன்❋

துவாரகா
+
நிமால்
1.பவித்திரா
2.விசாகன்

சிவபாலன்❋

பார்வதி❋
+
முரளிதரன்

க்குமரன்

லகுமதி
+
குமரன்
1.நர்மிகா

முகுந்தன்

பாலமதி

பிரணவன்
+
ஹரணா

சிவகாமி
+
பீற்றர்

லோகானந்தன்
+
துவாரகி
1.திலான்
வெங்கடேஸ்வரன்

சுகந்தி❋
+
ஜெயரட்ணம்
1.பாமினி

கீதா
+
ஜெயக்குமார்
1.பவிசியா

கந்தகுமார்
+
விவேகானந்தி

நந்தினி
+
பத்மநாதன்
1.தர்ஷிகா
2.தரணிகா
3.ஸ்ரீலவன்
4.மோகன்ராம்
5மோகனாங்கி

இளமுருகன்
+
நளாயினி
1.நாகநர்த்தனன்
2.தர்ஷனா
3.நாககீர்த்தனன்

நித்தியலட்சுமி
+
கும்பேசன்
1.உமையாள்
2.வாசுகி

தில்லைநடேசன்
+
புவனமகாதேவி
1.அருள்மொழிவர்மன்
2.மகேந்திரவர்மன்
3.பார்த்தீபவர்மன்

லோகேஸ்வரி
+
மகேந்திரநாதன்❋
1.மகேன் சிற்றம்பலம்
2.அபிராமி

சரஸ்வதி
+
பாலசிங்கம்

மனோகரன்
+
ஜெயந்தி

ங்கர்

சுபாஜினி
+
குகனேஸ்வரன்

தர்ஷினி
+
சுந்தரதாசன்
1.நிகிஷா
2.நிகிலன்

ரஞ்சித்மார்
+
புவனேஸ்வரி அம்மா
1.தர்மினி
2.பிரசாந்தன்

விஜயலட்சுமி
+
தயானந்தன்
1.கஜேந்திரன்
2.ஜானகி


சறோஜினி

❋அமரரைக்குறிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி நரசிங்க தேவன்வழி

## அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களின் வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புடைமை

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

மனத்தில் அன்பு இல்லாதவருடைய வாழ்க்கை
பாலைவனத்தில் பட்டமரம் தளிர்த்து போன்றது.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீரில் பூசல் தரும்

உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாள்பாழ் போட்டு
அடைத்து வைக்க முடியாது அன்புக்குரியவரின்
துன்பங்காணுமிடத்து கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே உரிமை கொண்டாடுவர்
அன்பு உடையவரோ தம் உடல் பிறருக்கென எண்ணிடுவர்

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு

உயிரும் உடலும்போல் அன்பும் செயலும்
இணைந்திருப்பதே உயர்ந்த பொருத்தமாகும்.

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு

அன்பு பிறறிடம் பற்றுள்ளம் கொள்ளச் செய்யும்
அந்த உள்ளம் நட்பு என்னும் பெருஞ்சிறப்பை உருவாக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்தன் கணினி அச்சகம்
சுன்னாகம்
0776664210